# யா/ஹாட்லிக் கல்லூரி, பருத்தித்துறை.
# J/ Hartley College, Point Pedro.

## விடுமுறைக்கால செயலட்டை–2020 – தரம் 11
## Holiday Worksheet – 2020 – Grade 11

| | | | | |
|---|---|---|---|---|
| வரலாறு | 33 | T | II, III | மூன்று மணித்தியாலம் Three Hours |
| சுட்டெண் Index No | | | | வரலாறு |

**பகுதி – II**

**எல்லா வினாக்களுக்கும் விடை எழுதுக.**

01. அ. கீழே (i) இல் குறிப்பிடப்பட்டுள்ள எல்லா வரலாற்று இடங்களையும் தரப்பட்டுள்ள இலங்கை புற உருவப்படத்திலும் (ii) இல் தரப்பட்டுள்ள எல்லா வாரலாற்று இடங்களையும் தரப்பட்டுள்ள உலகப் புற உருவப்படத்திலும் குறித்துப் பெயரிடுக

i. தெதுறு ஓயா, களனி கங்கை, கலாவாவி, யம்புகோளப்பட்டிணம், ஆணையிறவு, தேவநகரம், மாத்தளை அளுவிகாரை, பாகியன்கல,கல்வத்தொட்ட, கந்தளாய் குளம், உகி நகரம், கன்னொருவ

ii. மல்க்கா நீரினை, இசங்கடல், சுமத்திரா, தாமிரலிப்தி, தாய்லாந்து, இத்தாலி,

ஆ.i. பின்வரும் A, B, C, D ஆகியவற்றில் தரப்பட்டுள்ள வரலாற்று மக்கியத்துவம் வாய்ந்த தகவல்களுக்குரிய விடைகளை ஒழுங்குமுறைப்படி உங்கள் விடைத்தாளில் எழுதுக.

a. மகாவம்சத்தை எழுதிய மகாநாம தேரர் வாழ்ந்த பிரிவெனாவின் பெயர்

b. சேனைப் பயிர்ச்செய்கையில் அறவிடப்பட்ட “கெதி அட” “கெடுகன” ஆகிய இருவரி அறவீட்டையும் நீக்கிய மன்னன்.

c. போர்த்துக்கேயர் இலங்கைக்கு வருகை தந்த போது கோர்ட்டை இராச்சியத்தினை ஆட்சி செய்த மனனன் யார்

d. இலங்கையின் முதன்மையான நீதி மன்றமான உச்ச நீதி மன்றத்தின் தலைவரின் பதவிப்பெயர்

**A, B ஆகியவற்றினால் காட்டப்படடுள்ள படங்களை அவதானித்து கேட்கப்பட்டுள்ள வினாக்களுக்கான விடைகளை வினா ஒழுங்கில் உங்கள் விடைத்தாளில் தருக**

i.



அ. இவ்வுரு எவ்வாறுளு அழைக்கப்படுகின்றது?

ஆ. இங்கிருந்து ஆட்சி செய்த மன்னன் யார்?

இ. இங்கு காணப்படும் உலகப் பிரசித்தி பெற்ற கலை நிர்மாணம் யாது?

ஈ. இந்த இடத்தை பார்த்து இரசித்தவர்கள் தமது கருத்துக்களை பதித்துள்ள சுவர் எவ்வாறு அழைக்கப்படுகின்றது.

ii.



1. இந்நபரை எவ்வாறு அழைப்பர்?
2. இந்நபர் எந்த நாட்டைச் சேர்ந்தவர்?
3. இவரை கவர்ந்த விவாதம் எது?
4. இவரால் நிறுவப்பட்ட சங்கம் எது?

02. i. வரலாற்றுக்குமுற்பட்ட கால மனிதர்கள் வாழ்ந்த தாழ்நில ஈரவலயக்குகை வசிப்பிடங்கள் மூன்று தருக?

ii. a. வரலாற்றுக்கு முற்பட்ட கால இலங்கையில் மலைப்பாங்கான பிரதேசத்தில் ஏற்பட்ட மண்ணரிப்பினால் உருவாகிய சரளைக்கற் படிவுகள் தாழ்நிலங்களில் புதைந்திருப்பதற்கு காரணமான புவியியற் காலப்பகுதி எது?

b. மேற்கூறப்பட்ட சரளைக்கற் படிவுகளை தொல்பொருளாளர்கள் எப் பெயர் கொண்டு அழைக்கின்றனர்?

iii. a. முன்வரலாற்று காலத்தில் ஆய்வுகள் மூலம் கண்டுபிடிக்கப்பட்ட கல்லறை மயானங்கள் (cist buials) மூன்றினை பெயரிடுக.

b. ஊவா மாகாணத்தில் முன்வரலாற்றுக்காலத்திற்குரிய மயானங்களில் மேற்கொள்ளப்பட்ட அகழ்வுகளின் போது அஸ்தி (மனிதச் சாம்பல்) பாதுகாப்பதற்காக கையாளப்பட்ட இருவிசேடமான முறைகளை குறிப்பிடுக.

iv. இலங்கையில் ஆரம்பவரலாற்றுக்காலத்தில் குடியிருப்புகளின் பரம்பலில் செல்வாக்குச் செலுத்திய மூன்று பிரதான காரணிகளை குறிப்பிட்டு சுருக்கமாக விளக்குக.

03. கீழ்வரும் A, B, C ஆகிய கூற்றுக்களுடன் தொடர்புபடும் மன்னர்களை ஒழுங்கு முறைப்படி உங்கள் விடைத்தாளில் எழுதுக

i. a. பொருளாதாரத்திற்கு ஆற்றிய பணிக்காக “மின்னேரியாத் தெய்வம்” என்று வழிபடும் அளவிற்கு உயர்வடைந்த மன்னன்.

b. வசப மன்ன ஆட்சிகாலத்தில் நாகதீபத்தில் பியங்க திஸ்ஸ எனும் விகாரையைக்கட்டிய பிரதேச ஆட்சியாளன்.

c. கர்ப்பிணித்தாய்மாரின் தேவைக்காக பிரசவ விடுதிகளை கட்டுவதற்கு நடவடிக்கை மேற்கொண்ட மன்னன்

ii. மத்திய அரசாங்கத்துடன் தொடர்புடைய கீழ்வரும் பணிகளுக்கு பொறுப்பானவர்களின் பதவிப் பெயர்களை அடைப்புக்குறிக்குள் இருந்து தெலரிவு செய்து A, B, C, D ஒழுங்குமுறையில் எழுதுக.

a. தலைமை அமைச்சராக பணியாற்றியவர்
b. நகர கட்டட நிர்மாணி
c. அரசனின் குதிரைப்பிரிவின் தலைவர்
d. அரச ஆவணங்களின் தலைவர்.

(படகரிக, பதகு, மஹமத, நகர குத்திக, அசஅதெக, ஹதி அதெக, கனபெடிக, நகர வடிக)

iii. புராதன இலங்கையில் முன்னேற்றமடைந்திருந்த 3 கைத்தொழில்களை குறிப்பிட்டு இரண்டினை சுருக்கமாக விளக்குக.

iv. புராதன இலங்கையின் நடைமுறையிலிருந்த பொருளாதார அமைப்பில் விவசாயத்தில்
   a. நெற்செய்கை
   b. விலங்கு வேளாண்மை ஆகிய மேற்கொள்ளப்பட்ட முறைகளை விளக்குக.

04. i. பொலநறுவையின் வீழ்ச்சிக்குரிய காரணங்கள் மூன்றினைக் குறிப்பிடுக.
ii. தம்பதெனிய இராசதானியில் ஆட்சி புரிந்த இரண்டாம் பராக்கிரமபாகு மன்னனின் அரசியல் நடவடிக்கைகள் இரண்டினைக் குறிப்பிடுக.
iii. a. குருநாகல் இராசதானியின் முதலாவது மன்னன் யாா்?
   b. குருநாகல் இராசதானிக்காலத்தில் எழுதப்பட்ட இலக்கியங்களைக் குறிப்பிடுக?
iv. இலங்கையின் இரண்டாவது நகரமயமாக்கல் காலப்பகுதியில் இடம்பெற்ற வா்த்தக நடவடிக்கைகளை மூன்று மூலாதாரங்களை ஆதாரமாகக் கொண்டு விளக்குக.

05. i. கண்டி இராச்சியத்தின் முதலாம் இராஜசிங்க மன்னன் கண்டியை ஆக்கிரமித்த போது அதற்கு முகம் கொடுக்க முடியாமல் போர்த்துக்கேயரிடம் சரணடைந்த மூவரின் பெயரைக்குறிப்பிடுக.
ii. பின்வரும் வினாக்களுக்குரிய விடைகளை A, B, C, D ஒழுங்கில் உங்கள் விடைத்தாளில் எழுதுக
   a. கண்டி இராச்சியத்தின் முதல் மன்னன்
   b. முதலாம் இராஜசிங்க மன்னனுக்கு கண்டி இராச்சியத்தை ஆக்கிரமிப்பதற்கு உதவி புரிந்த கண்டி இராச்சிய பிரதானி
   c. கண்டி இராச்சியத்தினை மூன்று பிரிவாக பிரித்து அதனை மூன்று இளவரசா்களிடையே பகிர்ந்த மன்னன்.
   d. ஆங்கிலேயா் இலங்கையின் கரையோரத்தை கைப்பற்றியள போது கண்டி இராச்சியத்தினை ஆட்சி செய்த மன்னன்.
iii. முதலாம் விமலதா்ம சூரியன் கண்டி இராச்சியத்தில் தனது அட்சியின் சட்ட பூா்வத்தன்மையை நிலைநாட்டிக் கொள்வதற்காக மேற்கொண்ட நடவடிக்கைகள் இரண்டினைக்குறிப்பிட்டு விளக்குக.
iv. கண்டி இராச்சிய காலப்பகுதியில்
   a. நிா்வாக கட்டமைப்பு
   b. அரசனின் அதிகாரங்கள் ஆகியன ஒழுங்கபமைக்கப்பட்டிருந்த முறையினை எடுத்துக்காட்டுக.

06. i. இந்தியாவில் பிரான்சியரால் அமைக்கப்பட்ட வா்த்தக நிறுவனங்கள் மூன்றினைப் பெயரிடுக.
ii. மியூரன் குழுவின் பரிந்துரைகள் இரண்டினைக்குறிப்பிடுக.
iii. a. 1815இல் கண்டி உடன் உடன்படிக்கை கையொப்பமிட்ட போது பிரித்தானிய கொடியை கீழே இறக்கி சிங்கக்கொடியை மேலே ஏற்றியவா் யார்?
   b. கண்டி உடன்படிக்கையில் முதல் நான்கு வாசகங்களிலும் அடங்கியுள்ள விடயங்களை குறிப்பிடுக
iv. பிரித்தானியருக்கு எதிராக 1848ஆம் ஆண்டின் சுதந்திரப்போராட்டம் ஏற்படுவத்றகான காரணிகள் மூன்றினைக் குறிப்பிட்டு சுருக்கமாக விளக்குக.

07. i. பின்வரும் விடயங்களுடன் தொடா்புடையவா்களின் பெயா்களை ஒழுங்கு முறைப்படி எடுதுக.
   a. 1873இல் பாணந்துறை விவாதத்ததை மேற்கொண்டதன் மூலம் சா்வதேச பிரசித்தி பெற்ற பௌத்த தேரா்
   b. முஸ்லிம் மக்களுடைய கல்வி மறுமலா்ச்சியை ஏற்படுத்தும் பொருட்டு 1882இல் முஸ்லிம் நேசன் பத்திரிகையை உழுவாக்கியவா்.
   c. வண்ணாா் பண்ணையில் அச்சகம் ஒன்றை நிறுவி உதயபானு என்ற பத்திரகையை வெளியீடு செய்தவா்.
ii. இலங்கையில் பெத்த மறுமலா்ச்சி ஏற்படுத்தியதில் ஹென்றிஸ்டீல் ஒல்கொட் ஆற்றிய பணிகள் நான்கினைத் தருக.

iii. கோல்புறுக் அரசியல் யாப்பு சீர்திருத்தங்கள் இரண்டினைக்குறிப்பிடுக.

iv. இலங்கையில் பிரித்தானியர் ஆட்சியில் தோற்றம் பெற்ற மத்திய தர வகுப்பினரால் ஏற்பட்ட சமூக மாற்றங்கள் மூன்றைனக் குறிப்பிட்டு விளக்குக.

## பகுதி - III

08. i. மறுமலர்ச்சி காலத்தில் கல்வி மறுமலர்ச்சி ஏற்பட்ட துறைகள் மூன்றிறைனக்குறிப்பிடுக.

ii. மறுமலர்ச்சிக்காலத்தில் திருச்சபையை விமர்சனத்திற்கு உள்ளாக்கிய நால்வரின் பெயரைக் குறிப்பிடுக.

iii. a. மறுமலர்ச்சிக்காலத்தில் கலைத்துறையின் வளர்ச்சியில் தாக்கம் செலுத்திய காரணிகள் மூன்றினைக் குறிப்பிடுக.

b. மறுமலர்ச்சிக் ாகலத்தில் வாழ்ந்த சிறப்பான கட்டடக்கலைஞர்கள் இருவரைப் பெயரிடுக.

iv. ஐரோப்பாவில் ஏற்பட்ட மறுமலர்ச்சியால்

a. அரசியல்

b. பொருளாதாரம் ஆகிய துறைகளில் ஏற்பட்ட மாற்றங்களை சுருக்கமாக விளக்குக.

09. i. கைத்தொழில் புரட்சியின் ஆரம்பத்திற்கு அடிப்படையாக அமைந்த மூன்று கைத்தொழில் துறைகளைப் பெயரிடுக.

ii. கைத்தொழில் புரட்சியின் காரணமாக விவசாயத் துறையில் ஏற்பட்ட வளர்ச்சியில் செல்வாக்குச் செலுத்திய இரண்டு காரணிகளைக்குறிப்பிடுக.

iii. கைத்தொழில் புரட்சி இலங்கையில் செல்வாக்கு செலுத்திய விதத்தை இரண்டு விடயங்களின் துணையுடன் விளக்குக.

iv. கைத்தொழில புரட்சியின் காரணமாக சமூகத்தில் ஏற்பட்ட தீய விளைவுகள் மூன்றினை குறிப்பிட்டு விளக்குக.